IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

		O.S. No.	:	21/2023
		P/W's	:	PW1
DEPOSITION OF WITNESS			:	
NAME	A.முனியசாமி	CASTE	:	
S/O	அழகப்ப கவுண்டர்	RELIGION	:	இந்து
VILLAGE	வாடிப்பட்டி	CALLING	:	
TALUK	வாடிப்பட்டி	AGE	:	81

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.02.2026

குறுக்கு விசாரணை

1. நான் எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரி 60 வருடங்களாக குடியிருக்கிறேன். கல்வேலிப்பட்டியிலும் தற்போது குடியிருக்கிறேன். கல்வேலிப்பட்டியில் உள்ள முகவரி சம்பந்தமாக வழக்கில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் இராணுவத்தில் இருந்தேன். வழக்குச்சொத்தான 8 செண்டில் பாதி பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குச்சொத்து பூர்வீக சொத்து கிடையாது, அது எனது அம்மாவின் சுயசம்பாத்திய சொத்து.

2. RDO அலுவலகத்தில் எவ்வளவு செண்ட் இடம் கேட்டு மனு தாக்கல் செய்தேன் என்று ஞாபகமில்லை. அந்த வழக்கில் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யுமாறு சொல்லி அந்த மனுவை தள்ளுபடி செய்துவிட்டார்கள். வழக்குச்சொத்தை நான் அனுபவத்தில் இருப்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் நான் அனுபவத்தில்தான் இருக்கிறேன். வழக்குச்சொத்தில் பிரதிவாதி கடை வைத்துள்ளார் என்றால் சரிதான், அவர்களின் பாதி பங்கு இடத்தில் கட்டியுள்ளார்கள், எனது பாதி இடம் காலியாக மரம் செடிகளுடன் தான் உள்ளது.

3. வழக்குச்சொத்தில் பிரதிவாதிகள் கழிவறை கட்டியுள்ளார்கள் என்றால் அவர்கள் பாதி இடத்தில் கட்டியுள்ளார்கள். வழக்குச்சொத்தை இதுவரை சர்வேயர் வைத்து அளக்கவில்லை. எங்கள் குடும்பத்தில் மற்ற சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான், வாய்மொழியாக பிரித்து அதன் படி வருவாய் ஆவணங்களில் மாற்றம் செய்துகொண்டோம். வழக்குச்சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் உள்ளதா என்றால் பாகம் கொடுத்தவாறே உள்ளது. எனது பெயரில்

வருவாய் ஆவணங்கள் உள்ளதா என்றால் பிரதிவாதிகள் அவர்கள் பெயருக்கு சட்டவிரோதமாக மாற்றிக்கொண்டார்கள்.

4. எனது தாய் தகப்பனாருக்கு நானும் பிரதிவாதியின் தகப்பனார் காமாட்சி கவுண்டரும் 2 பேர்தான் வாரிசுகள். எனது பெற்றோரின் சொத்துக்களில் எனக்கு சரிபாதி பங்கு உள்ளது என்ற உரிமையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரர் காமாட்சி கவுண்டர் விவசாயம்தான் செய்துவந்தார். வழக்குச்சொத்து உள்ள ஊரில் எனக்கு மண்சுவர் வைத்த குடிசைவீடு உள்ளது, அதை நான் தான் கட்டினேன். அந்த வீடு உள்ள இடம் எனது தாயார் பெயரில் இருந்தது. அந்த வீடு உள்ள இடம் 4 செண்ட்.

5. மேற்படி இடத்திலிருந்து குடிசை வீட்டை இடித்து விட்டுதான் நான் காரைவீடு கட்டினேன். மேற்படி 4 செண்ட் இடம் எனது தாயாரால் எனக்கு ஒதுக்கப்பட்டது. அதில் எனது சகோதரருக்கு பாகம் தரவில்லை. 1, 2 பிரதிவாதிகள் முதலில் நாசிக்கில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வீட்டை முதலில் வாடகைக்கு விட்டிருந்தேன், தற்போது அதில் நான்தான் வசித்து வருகிறேன். மேற்படி வீட்டிற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லாததால் அதன் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

6. எங்கள் குடும்ப சொத்துக்களில் மற்றவை விவசாய நிலங்கள் என்றாலும் வழக்குச்சொத்தும், நான் வீடு கட்டியுள்ள இடமும் மட்டும்தான் வீட்டுமனை என்றால் சரிதான். எனது சகோதரர் வழக்குச்சொத்து உள்ள ஊரில்தான் குடியிருந்தார். நான் வீடு கட்டியுள்ள இடத்தையும் வழக்குச்சொத்தையும் தவிர மற்ற குடும்பச்சொத்துக்களை பாகம் பிரிவினை செய்து பத்திரம் பதிந்துகொண்டோம் என்றால் சரிதான். வழக்குச்சொத்து ஆதியில் விவசாய படப்பு போடுவதற்காக பயன்படுத்தப்பட்டது.

7. நான் இராணுவத்தில் இருந்ததால் எனக்கு வீடு கட்ட குடிசை வீடு இருந்த 4 செண்ட் இடத்தையும், எனது சகோதரர் விவசாயம் செய்து வந்தததால் அவருக்கு வழக்குச்சொத்தான 8 செண்ட் படப்பு இடத்தையும் பாகப்பிரிவினையின்படி ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து எனது தம்பிக்கு ஒதுக்கப்பட்டதால்தான் எனது தம்பி 2013 ல் இறக்கும்வரை நான் மேற்படி சொத்தில் பாகம் கேட்காமல் தற்போது அவரது வாரிசுகளிடம் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. நான் வீடு கட்டியுள்ள இடம் எனது பெயரில் இருந்தால்தான் வீடு கட்டமுடியும் என்பதால் அந்த இடத்தை எனது தாயார் அழைத்து சென்று எனது பெயருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல, நான் எனது தாயாருக்கு செய்த பராமரிப்பு செலவுக்காக தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார். எனது தம்பி எனது வீட்டு இடத்திற்கும் அவருக்கும் சம்பந்தமில்லை என்றும் வெண்ணிலை விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்.

9. வழக்குச்சொத்து எனக்கு பங்கு இல்லை என்று எனது வீட்டு இடத்தை பெற்றுக்கொண்டு தற்போது பொய்யாக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. RDO நீதிமன்றத்தில் குறைவான இடம் கேட்டு மனு செய்துவிட்டு தற்போது வழக்குச்சொத்தில் சரிபாதி இடம் கேட்டு அதை அபகரிப்பதற்காக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் எந்த உரிமையும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy //
Sd/– M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.